**22.12.2022**

**OS.No. 15/2021 DW : 2,** திரு. அர்ஜுனன்

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

என்னுடைய நிரந்தர குடியிருப்பு பாப்பரம்பாக்கம் கிராமம் ஆகும். வாதிகள், பிரதிவாதி குடும்பம் பற்றி எனக்கு முழுவிவரமும் தெரியும். பிரதிவாதி தான் சாட்சி சொல்ல என்னை அழைத்து வந்தார். வாதிகளின் தாயார் பெயர் நரசம்மாள். அவர் 2018ல் காலமானார். அவர் அதற்கு முன் 15 வருடமாக என் வீட்டிற்கு வருவார், பேசிவிட்டு செல்வார். அவர் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார். படுத்தபடுக்கையாக இருக்கவில்லை. அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தாரா என்று நான் பார்க்கவில்லை. 1ஆம் வாதியின் பிள்ளைகள் தான் 2, 3 வாதிகள். நரசம்மாள் இறப்பதற்கு 1 வருடத்திற்கு முன்னர் தான் 3ஆம் வாதிக்கு திருமணமானது. அவர் திருமணத்திற்கு நான் செல்லவில்லை. என் மனைவி சென்றார். 3ஆம் வாதியின் திருமணத்திற்கு நரசம்மாள் சென்றாரா என்று எனக்கு தெரியாது. அவர் மனவருத்தத்தில் இருந்ததால் அவர் செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் போட்டோக்களில் இருப்பது நரசம்மாள் தான். அவர் 3ஆம் வாதியின் திருமணத்தில் கலந்துகொண்டதாக இருக்கிறது. அந்த போட்டோக்கள் **வா.சா.ஆ.7** ஆகும். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள வீடு 1ஆம் வாதியின் வீடாகும். அதில் உட்கார்ந்து இருப்பது நரசம்மாள் தான். அந்த போட்டோக்கள் **வா.சா.ஆ.8** ஆகும். அந்த வீட்டைகட்டி 15 வருடம் இருக்கும். வாசாஆ8 போட்டோவில் அவர் உட்கார்ந்திருப்பது அவர் இறப்பதற்கு கொஞ்ச நாட்களுக்கு முன்னர் எடுத்தது. பிரதிவாதிக்கு திருமணமாகாததால் நரசம்மாள்

பிரதிவாதி வீட்டில் இருந்தார் என்றும் மற்ற நேரங்களில் வாதிகள் வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் இறப்பதற்கு முதல்நாள் தான் வாதிகளின் வீட்டில் நரசம்மாள் வாசாஆ8 போட்டோவில் கண்டுள்ளபடி உட்கார்ந்திருந்தார் என்றும் 3ஆம் வாதிக்கு பிறந்த குழந்தையை வீட்டிற்கு கொண்டுவரும்போது குழந்தையை பார்ப்பதற்காக அங்கே உட்கார்ந்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. ஆகவே அவர் இறப்பதற்கு 5 வருடத்திற்கு முன்பிருந்தே ஆற்றலற்றவராகி வயதான காலத்தில் சுயநினைவின்றி இருந்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஏழுமலை நாயக்கர் மகன் பூபதி மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் வீடு பிரதிவாதியின் வீட்டிற்கு அருகில் இருக்கிறது. வாதிகளின் வீடும் அங்கே தான் இருக்கிறது. பிரதிவாதிக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.